14th February 1955]

* Sri T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I am glad that the Hon. the Minister for Education has assured that immediate action will be taken. But, on a point of personal explanation, I would like to say that telegraphic representations were made to the Hon. Minister as well as to the Government. A written representation was also made by the President of the Malabar Elementary School Teachers' Association, a copy of which I have in my hand. Unfortunately, the Government have not taken any action so far. It is for this reason that I have brought forward this adjournment motion and not for publicity purposes."

Mr. SPEAKER :—" I would like to know whether the hon. Member is pressing his motion."

Sri T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, in view of the assurance given by the Hon. the Minister for Education, I am not pressing the motion."

(2) ARREST AND BEATING OF PEASANTS (IN KADAYANALLUR) BY THE ARMED RESERVE POLICE.

Mr. SPEAKER :—" The hon. Member Sri C. Kandasami has given notice of an adjournment motion which runs as follows :—

'This House do stand adjourned to discuss a matter of urgent public importance, namely, the indiscriminate arrest of a large number of peasants and subjecting them to severe beating by the Armed Reserve Police in the village of Kadayanallur in Tirunelveli district on 12th February 1955.'

" I must again repeat what I have said previously, namely, the House will be given an opportunity by way of half-hour debates and one-hour debates to discuss such matters. When there are such opportunities, I cannot understand why the hon. Member has brought forward this matter under adjournment motions, i.e., adjournment of the House to discuss a matter of urgent public importance."

* Sri C. KANDASAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லா, கடையநல்லூர் கிராமத்தில் நடந்த ஒரு சம்பவம் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு விஷயமாக இருக்கிறது. அதற்கு சட்டபூர்வமான நிவாரணம் எப்படிக் கிடைக்கும் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட நபரின்மேல் ஒரு குறிப்பிட்ட நிர்வாக அதிகாரி தலையிட்டு ஏதாவது செய்திருந்தால் உடனே சட்டபூர்வமாக நிவாரணம் கோர முடியும்.

" விஷயம் என்னவென்றால், கடையநல்லூரிலிருக்கும் விவசாயிகள் தங்களுக்கு மூன்றிலொரு பங்கு வாரம் கிடைப்பதற்கு வகை செய்யவேண்டுமென்று சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடம் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் அதில் ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால் வயலில் அறுவடை செய்துகொண்டிருக்கும்போது ஏராளமான விவசாயிகளை போலீசார் கைது செய்து, பிறகு அவர்களை அடித்திருக்கிறார்கள். அதிகாரிகள் வெகு ஜனங்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும்போது என்ன செய்வதென்பது புரியவில்லை.

" விவசாயிகளை ரிசர்வ் போலீசார் அடித்திருக்கிறார்கள். ரிசர்வ் போலீஸ் அங்கு முகாம் போட்டிருக்கிறது. இப்படி ஜனங்களை பயமுறுத்தக்கூடிய முறையில் அரசாங்கம் நடந்துகொள்ளும்போது, அங்கிருக்கக்கூடிய விவ

சாயிகள் கோர்ட்டுக்குப்போய் எப்படி நிவாரணம் பெறமுடியும் ? இது வெகு ஜனங்களைப்பாதிக்கக்கூடிய பிரச்னையாக இருப்பதால் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இவ்விஷயம் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

* **Sri M. KALYANASUNDARAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிலைமையில் விவசாயிகள் சட்டபூர்வமாகப் பரிகாரம் தேடிக்கொள்வதற்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் கிடையாது. குத்தகை சம்பந்தமாக விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் இடையே கடையநல்லூர் கிராமத்தில் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தகராறில் மிராசுதாரருக்கு ஏதாவது அபிப்பிராயம் மாறுபட்டதாக இருந்தால் சிவில் கோர்ட்டுக்குப் போய் நியாயமான முறையில் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். அப்படியிருக்க ஆயுதந் தாங்கிய போலீஸ் அங்கு சென்று விவசாயிகளை அடித்துத் தொந்தரவு பண்ணியிருக்கிறார்கள். விவசாயிகளிடமிருந்த நெல் கட்டாயமாக போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டு மிராசுதாரர்களுடைய வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள். இதுவா போலீசாருடைய கடமை ? போலீசாருடைய கடமை இதுவல்ல. விவசாயிகள் மிராசுதாரர்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் போலீசார் அதில் தலையிடுவதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் போலீசார் வேண்டுமென்றே விவசாயிகளைப் பயமுறுத்தி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். **17** பேர்களைக் கைது செய்தாலும் அவர்கள்மேல் கேசு போடக்கூடிய ஆதாரம் இருக்குமா என்பது சந்தேகம். கேசு போட்டால் வாதாட முடியும். கடையநல்லூரில் பொதுமக்களிடத்தில் போலீசார் ஒழுங்கீனமான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது."

* **The Hon. Sri C. SUBRAMANIAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒத்திவைப்புப் பிரேரணைக்குத் தகுந்தது அல்ல என்று நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடையநல்லூரில் போலீசார் ஒழுங்கு தவறி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ கந்தசாமி அவர்களும், ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும் சொன்னதை நான் நேரடியாக ஒப்புக்கொள்வதற்குத் தயாராயில்லை. அதைப்பற்றி விசாரணை செய்து, அதனுடைய உண்மை விவரத்தைத் தெரிந்துகொண்ட பிற்பாடுதான் நான் சொல்ல முடியும்.

" ஆனால் எங்கெங்கே அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் போலீசார் சென்று பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இஷ்டம்போல் போலீஸ்காரர்கள் அப்படி நடந்துகொண்டார்கள் இப்படி நடந்துகொண்டார்கள் என்று புகார் சொல்வது வழக்கமாக இருக்கிறது. இது எதிர்க்கட்சியினர் வழக்கமாகச் சொல்லக்கூடிய புகாரா அல்லது உண்மையான புகாரா என்று சொல்லக்கூடிய நிலைமையில் நான் இப்பொழுது இல்லை. இதைப்பற்றி விசாரித்து, போலீசார் ஏதாவது ஒழுங்கீனமாக நடந்துகொண்டிருந்தால் சர்க்கார் கவனிக்கும். கனம் அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் இந்த விஷயம் ஒத்திவைப்புப் பிரேரணைக்கேற்றது அல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

* **Sri M. KALYANASUNDARAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, சொந்த முறையில் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். கனம் மந்திரி அவர்கள் சொன்னதைப்போல இது வழக்கமான புகார் அல்ல. ஆனால், போலீசார் வழக்கமாக எடுக்கும் நடவடிக்கையின்பேரில் எழுகின்ற உண்மையான புகார்."

Mr. SPEAKER :—" In view of the assurance given by the **Hon. Minister, I would like to know whether the hon. Member is pressing his motion or whether he wants a ruling from me."**

14th February 1955]

*SRI M. KALYANASUNDARAM :—“ இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்தவேண்டாம் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனால், மந்திரி அவர்களுடைய பதில் திருப்திகரமாக இல்லை. இருந்த போதிலும் இப்பிரேரணையை வற்புறுத்துவதன் மூலம் தங்களுக்கு ஒரு சங்கடமான நிலைமையை உண்டாக்க வேண்டாமென்று நினைக்கிறேன்.”

MR. SPEAKER :—“ நீங்கள் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்துவதினால் எனக்கொன்றும் சங்கடம் கிடையாது. எனக்காக நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். நீங்கள் இப்பிரேரணையை வற்புறுத்துகிறீர்களா ? ”

* SRI M. KALYANASUNDARAM :—“ கனம் மந்திரி அவர்கள் ‘ இது விஷயத்தைப்பற்றி விசாரிக்கிறேன் ’ என்று ஒரு வார்த்தை பதில் சொல்லியிருந்தால் திருப்திகரமாக இருந்திருக்கும். அதற்குப் பதிலாக நாங்கள் இந்தப் புகாரைக் கொண்டுவந்ததே தவறு என்ற முறையில் மந்திரி அவர்கள் கற்பனை செய்துகொண்டு பேசியிருக்கிறார். இருந்தாலும் இப்பிரேரணையை நாங்கள் வற்புறுத்தவில்லை.”

III.—GOVERNMENT BILL.

THE MADRAS INDEBTED AGRICULTURISTS (REPAYMENT OF DEBTS) BILL, 1955.

MR. SPEAKER :—“ Let us now go to the next item on the agenda, namely, the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Bill, 1955. Shall we allow one day for discussing this Bill? ”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ Sir, in view of the fact that we are referring this Bill to a Joint Select Committee, a shorter discussion will do but considering the requests made by very many hon. Members, I have agreed that the whole of today be allotted for this Bill. It should be finished to-day.”

* SRI M. KALYANASUNDARAM :—“ Sir, one full day will not be sufficient, especially, in view of the fact that the Joint Select Committee will have to sit and hurry through the whole proceedings as the Bill has to be passed before the 28th February 1955. Therefore a discussion for two days at this stage on the Bill will be more useful to the Select Committee. I therefore suggest that at least two days may be allotted for this Bill or at least half-a-day to-morrow may be allotted. Of course, I can anticipate what the Hon. the Leader of the House will say, namely, that the Bill will have to be placed before the Council for getting their approval to the setting up of a Joint Select Committee. That is why I have suggested that half-a-day may be allotted to-morrow.”

* SRI S. SWAYAMPRAKASAM :—“ Sir, the Leader of the House says that simply because the Bill is to be referred to a Joint Select Committee we need not have a discussion. I do not agree with it. If a particular Bill is to go before a Select Committee, it is always better to have a discussion on it so as to enable the Members serving on the Select Committee to see on what lines the House desires to make improvements or amendments or alterations. If we want to have a full discussion, as the hon. Member